## பெலிஅத்த பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பெலிஅத்த பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 112,633 தொகையான செலவினம் ஆண்டின் செலவினத்திலும் கடன்கொடுத்தோரிலும் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் உறுப்பினர் நிதி ஏற்பாடு மற்றும் பிரமாண அடிப்படையிலான நிதியத்தின் கீழ் ரூபா 2,424,717 கூட்டுத்தொகை சபைக்குக் கிடைத்திருந்ததுடன் அது மூலதன வருமானத்தின் (3.80) கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர்

ஒதுக்கங்களினுள் இந்த தொகையிலிருந்து ரூபா 2,215,045 தொகையான மூலதன வருமானம் கிடைக்கவேண்டிய வருமானமாக மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 2,998,804 கூட்டுத்தொகையான 06 வேலைகளின் பெறுமதி கடன்பட்டோர் ஒதுக்கங்களிலும் கடன்கொடுத்தோர் ஒதுக்கங்களிலும் உள்ளடங்கியிருந்ததுடன் அந்த வேலைகளை நிறைவேற்றுதல் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரதேச சபையின் முன்பக்கமும் பின்பக்கமும் அலுவலகத்தை மீள் கட்டமைப்புச் செய்வதற்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 571,300 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 437,671 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 133,629 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான ரூபா 430,251 கூட்டுத்தொகையான கட்டிடம், நகர அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அகற்றப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளிலிருந்து அப்பெறுமதி அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 திசெம்பர் 20 ஆந் திகதி வீதிப்பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த போட்டன் ட்ரம் டெக் டிபர் வண்டியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்துதல் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடு வழங்கப்பட்ட 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் V ஆம் பகுதியின் 132 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் தலைவர், உபதலைவரை உள்ளடக்கிய பதினான்கு உறுப்பினர்களுக்கும் 14 மடி கணனிகளை சபை நிதியத்திலிருந்து கொள்வனவு செய்வதற்காக 2014 யூன் 26 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் போது முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டு ரூபா

1,048,600 பெறுமதியான 14 மடி கணனிகள் 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதி சபை நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 264,134 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,860,839 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

-------------------------------

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

----------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,586 | 2,755 | 1,225 |
| (ii) | வாடகை | 8,940 | 7,541 | 1,208 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 573 | 832 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 40,249 | 38,106 | 100,945 |

### 2.2.2 ஆதனவரி

---------------------

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி வருமானமான ரூபா 1,214,028 இனை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

-----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கடை வாடகை**

--------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 678,410 கூட்டுத்தொகை நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவது தொடர்பில் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கேள்வி நடைமுறையினைப் பின்பற்றாமை**

------------------------------------------------------------------------

தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகளில் ஒரே தடவையில் பெறப்படும் பணத்தைப் பெற்று திறந்த கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றி வாடகைக்கு வழங்க வேண்டியிருந்தமை வாடகையாளரைத் தெரிவு செய்யும் போது முறையான சபை அங்கீகாரமொன்று பெறப்பட வேண்டியமையும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபைக்குரிய சகல கடைகளையும் வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) கடைகளை உப வாடகைக்கு விடல்**

------------------------------------------------------------------

மேற்குறித்த சுற்றறிக்கையிள் II ஆம் பந்தியின் பிரகாரம் வாடகையாளர் வேறொரு தரப்பினருக்கு வாடகை உரித்தைக் கையளித்தல் சபையின் அங்கீகாரமின்றி மேற்கொள்ள முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 16 கடைகள் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக உப வாடகைக்கு

வழங்கப்பட்டிருந்தமை 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**2.2.4 இயந்திர உபகரண வருமானம்**

---

சபையினால் பெகோ இயந்திரம், மோட்டார் கிறேடர், லொறி, பவுசர் மற்றும் கலி பவுசர் என்பவற்றை சேவையில் ஈடுபடுத்தியதற்காக ரூபா 1,145,969 கூட்டுத்தொகையானது ஆண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

---

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,231,206 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டியிருந்தது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) ஊழியர் நிர்வாகம்
(ஈ) வருமான நிர்வாகம்